## கனவான்களையும் சாதனையாளர்களையும் கௌரவிக்கும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை

இன்று நம் சமூகம் ஒரு நெருக்கடியான சூழலிற்கு முகம் கொடுக்க நிற்பந்திக்கப்பட்டுள்ளது.ஒருபுறத்திலே மக்கள் தமது மதிப்பிடமுடியாத சொத்துக்களான உயிர்,உடமைகளை இழந்து உடல்,உள ரீதியான பாதிப்புக்களுடன் வாழவேண்டிய நிர்ப்பந்தம் மறுபுறத்தில் எமது முழு சமூகமும் உளரீதியாக காயப்படுத்தப்பட்டு நீண்டதொரு பின்னடைவிற்கு ஆட்படுத்துப்பட்டமை.எம்மினத்தின் வாழ்வியலில் பயிற்றப்பட்டுவந்த பண்பாட்டுக்கருவூலங்கள் முற்றுமுழுதாக சிதைவுற்றுப்போகும் நவீன ஆபத்து வேரூன்றிக் காணப்படுகிறது.இத்தகைய இருண்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகப்பார்வையாளர்களினால் பாரம்பரியம் பேணல், ஆவணப்படுத்தல், சாதனையாளர்களையும் சமூகத்தொண்டர்களையும் கௌரவித்தல் போன்றன மிகவும் அத்தியாவசியமானவை மட்டுமல்ல சமூகக்கடப்பாடுமாகும்.

இவ்வேளையில் தம்மக்களுக்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் பல்வேறு துறைகளிலும் தம் ஆளுமைகளாலும்,தலைமைத்துவப் பண்புகளாலும் தன்னார்வத்துடனும் பயனுறு பணிகளை ஆற்றிச்சென்றவர்களை பாராட்டிக்கௌரவிக்கும் பண்பை வல்வெட்டித்துறை மண் தொடர்ந்து வருகின்றது.போர்க்காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்தாலும் இப்பணியை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபை தொடர்ந்து செய்துவருவது பாராட்டுக்குரியது.

வல்வைமண் கடலையும் கடல்சார் முயற்சிகளையும் செல்வமாக கொண்டு சாதனைகள் பல படைத்தபோதும் காலத்திற்கு காலம் இயற்கையாலும் வேறுசக்திகளாலும் பல அச்சுறுத்தல்களை எதிர் நோக்கியே தன் பயணத்தை தொடர்கிறது.மீண்டும் மீண்டும் வல்லமையுடன் எழுந்து நிற்கும் பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதற்கு வரலாற்றுச்சான்றுகள் பல உள.

வல்வை மண் என்றதும் பலருக்கு ஞாபகம் வருவது எம்மூர் மேத்திகளால் கட்டப்பட்டு எம்மவர்களாலேயே அமெரிக்காவுக்கு செலுத்திச்செல்லப்பட்ட பாய்மரக்கப்பலான "அன்னப்பூரணியே", ஆனால் அதற்கு முன்பும் பின்புமாக பல நூற்றாண்டுகளாக

சாதிக்கப்பட்ட சாதனைகள்பல வல்வை மண்ணுள் புதைந்திருக்கின்றன, அவற்றையெல்லாம் ஆவணப்படுத்த வேண்டிய சமூகப்பொறுப்பு இன்றைய தலைமுறையினருக்கு உண்டு.

இதன் அங்கமாகவே இக்கட்டுரையும் இடம்பெறுகிறது.

## அன்றைய வல்வெட்டித்துறை இந்திராணி ஆஸ்பத்திரி (Hospital)யும் இன்றைய வல்வை மாவட்ட வைத்தியசாலையும்

"வரலாற்றில் வல்வெட்டித்துறை" எனும் ஆவண நூலின் ஆசிரியரான திரு.பா.மீனாட்சிசுந்தரம் அவர்கள் வல்வை மாவட்ட வைத்தியசாலையின் வைரவிழா சிறப்புப்பதிப்பில் குறிப்பிட்டவற்றையும் எம் ஊரைச்சேர்ந்தவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படியும், பின்வருவனவற்றை அறியக்கூடியதாக உள்ளன.

எமது பிராந்தியத்தின் வைத்தியமுறை பண்டைய வைத்திய முறையாகவே இருந்து வந்துள்ளது.1813ம் ஆண்டு புரட்டாதிமாதம் அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்தடைந்த பின்னரே ஆங்கில வைத்திய முறை அறிமுகமாகி உள்ளது. இங்கு வந்த மிஷனரிமாரில் டாக்டர் பட்டம் பெறாத ஆனால் பென்சிலவேனியாவிலுள்ள வைத்தியசாலையில் ஒருவருட பயிற்சியை பெற்றவர்களான Rev.EDWARD WARAEN,Rev.JAMES RICHARD என்பவர்கள் தாம் வசித்த பகுதிகளில் வைத்தியம் பார்த்து வந்தனர்,சிறிது காலத்தின்பின்னால் 1816ல் தெல்லிப்பளையிலும் வட்டுக்கோட்டையிலும் அரச உதவியுடன் சிறிய சிறிய ஆங்கிலவைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன .DR.Rev.JOHN SEUDDER என்பவர் 1820ல் பண்டத்தரிப்பிலும் 1833ல் சாவகச்சேரியிலும் வைத்தியம் பார்த்தார்.DR.NATHANWARD, DR.SAMUEL GREEN, DR.C.T.MILLS என்போரின் வருகைக்காலங்களில் மானிப்பாயில் ஒரு ஆங்கில வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டதுடன் 1873 - 1880 காலப்பகுதிகளில் வைத்தியக்கற்கை நெறிகளும் நடாத்தப்பட்டுள்ளன.1898ல் காரைதீவு,இணுவில் ஆகிய இடங்களிலும் வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வகையில் வல்வெட்டித்துறையிலும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கப்பல்கள் நங்கூரமிட்டு ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இடமாகிய ரேவடி என்னும் இடத்தில் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை அமைந்துள்ள இடத்தில் ஒரு நிலையம் அமெரிக்க மிஷனரிமாரினால் அமைக்கப்பட்டதென நம்பப்படுகிறது.

எமது மூதாதையரின் கூற்றுப்படியும் மறைந்த எனது தாயார் நடராஜா வள்ளியம்மாள் அவர்களிடமிருந்து அறிந்ததன் மூலம் வல்வெட்டித்துறையில் அதுவே முதலாவது ஆங்கில வைத்தியசாலையாகும் அதற்கு முன்னரும் 1950கள் வரையிலும் நாட்டுவைத்தியமே இங்கு நிலவிவந்தது.பரிசாரகர்கள் வாரத்திற்கொருமுறையோ இரண்டு தடவைகளோ தமது மருந்துப்பெட்டிகளுடன் வீடுவீடாக சென்று வைத்தியம் பார்த்து வந்தனர்.மகப்பேற்றை பொருத்தவரையில் வல்வையில் இதற்கென பிரசவ விடுதிகள் இல்லாமையினால் அவரவர் வீடுகளிலேயே நடந்துவந்துள்ளது.குழந்தை பிறக்கும் காலம் நெருங்கியவுடன் அதனைக்கவனிப்பதற்கு இவ்விடயத்தில் முனனுபவமுள்ள ஊரிலிருக்கும் கைதேர்ந்த பெண்கள் வீட்டுக்கு வந்து அயவலரின் உதவியுடன் வரசவம் பார்ப்பார்கள்.இவையாவும் அக்கால நாட்டு வைத்திய முறைப்படியே நடந்தன.

இக்கைவைத்திய முறையில் குழந்தையை பெற்றதாயின் உடல் நோவைத்தணிப்பதற்காக கசாயம் எனப்படும் மூலிகைக்கலவையை கொடுப்பார்கள்.இது வேர்க்கொம்பு மற்றும் சில மூலிகைகள் சேர்த்து அரைக்கப்பட்ட கலவையை காய்ச்சிய ஒரு கூழாகும், இது உடலின் உள்நோவையும் காயத்தையும் குறைப்பதால் ஏற்பட்டிருக்கலாம்.இவர்களுடைய இவ்வைத்தியத்தில் வல்வெட்டித்துறையை பொறுத்தமட்டில் சில தெரிந்தெரிந்தெடுக்கப்பட்ட மீன் வகைகளான ஒட்டி, சுறாக்குட்டி போன்றவற்றை அவற்றின் இயல்ல்புகளுக்கேற்ப அரைத்த குளம்பாகவும் நல்லெண்ணையில் சுண்டியும் கொடுத்து தாயின் பாலூட்டும் சக்தியையும் உடல்வலுவையும் அதிகரிப்பார்களாம்.

இதன்பின் வேம்பு,னொச்சி,ஆமணக்கு,ஆடாதோடை முதலிய இலைகளை நன்கு அவித்து அந்த வெந்நீரில் தாயை குளிப்பாட்டுவார்கள், இது தாயின் உடல் நோக்கள் குறையும்வரை தொடருமாம்.இப்படியான கைவைத்தியம் குழந்தைக்கும் தாய்க்குமாக ஒரு சில வாரங்களுக்கு தொடர்ந்து சென்று பின்னர் குழந்தைக்குரிய வைத்தியமும் வளர்ச்சிக்கிரிய சில நாட்டுவைத்தியங்களும் தொடர்ந்து வல்வெட்டித்துறை மக்கள் தேகதிடகாத்திரமாக வளர்ந்து சாதனையாளர்கள் ஆனார்கள் என்பது ஒரு வரலாறு.

1870களில் மந்திகையில் ஆங்கிலேய வைத்திய வசதியுடன் அரச வைத்தியசாலை நிறுவப்பட்டு வடமராட்சி மக்களுக்கு சேவை செய்து வந்தது.எனினும் வல்வெட்டித்துறை மக்களுக்கும் அயற்கிராம மக்களுக்கும் மந்திகைக்கு சென்று பிரசவம் பார்ப்பது என்பதில் பல சிரமங்கள் இருந்தன.இக்காலகட்டத்தில் வல்வெட்டித்துறையில் தெணியம்பையில் ஒரு சிறிய பிரசவ விடுதி இயங்கிவந்ததாகவும் அறியக்கிடைக்கின்றது.

இவ்வாறு வல்வை மக்களும் அயல்கிராம வாசிகளும் வைத்திய வசதிகளை தமது சனப்பெருக்கத்திற்கேற்ப ஈடு செய்து கொள்ள முடியாது அவஸ்தைப்பட்ட காலத்தில் பெரும் பரோபகாரியான......